1975 அக்டோபர் 23]

பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் ரூபாய் ஐந்து கோடி அடிப்படை மூலதனமாக முதற்கண் வைத்திட வேண்டுமென்பது இதில் செய்யப்பட்ட பரிவுரைகளில் ஒன்றாகும். இதுகுறித்து திட்டவட்டமான செயற்குறிப்பு எதுவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடமிருந்து அரசுக்கு இதுவரை வந்து சேரவில்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister when this scheme of opening a Metropolitan Land Bank will be implemented ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதற்கான அடிப்படையான ஆலோசனைகளே நடைபெறவில்லை. ஒரு கருத்தரங்கில் பேசப்பட்ட, சொல்லப்பட்ட ஆலோசனைதான் அது. ஆனால் இந்த வங்கி ஏற்படுத்தப்படாவிட்டாலும், எங்கெங்கு பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு வாய்ப்பிருக்கிறதோ அவற்றின் தனித்தனி வளர்ச்சிக்கு, மணலி, எண்ணூர் போன்ற இடங்களில், இப்படி எங்கெங்கு ஏற்படுத்தப்படுகிறதோ அந்த இடங்களில் லேண்ட் அக்விசிஷன் எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்வதற்கான நிதியைப் பெறுவதற்கு இந்தப் பெருநகர் வளர்ச்சி மன்றம் முயற்சிக்கிறது.

வீரக்கல்புதூர் நீர் வழங்கு திட்டம்

***9 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டத்திற்கு அரசு ஜனவரி 1975-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வருகிற 1976-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமுலுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டிருக்கிறது.